**வகுப்பு 4**
**தமிழ்**
**இலக்கணம் : பால்**

## 1. வினாக்களுக்கு விடையளி

1. **பால் என்றால் என்ன?**

திணையின் உட்பிரிவே பால் ஆகும், பால் என்ற சொல்லிற்குப் பகுப்பு என்பது பொருள்.

2. **பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பால் ஐந்து வகைப்படும்

- ஆண்பால்
- பெண்பால்
- பலர்பால்
- ஒன்றன்பால்
- பலவின்பால்

3. **ஆண்பால் என்றால் என்ன?**

ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.

எ.கா : கோகுல், மாதவ், மன்னன்,..............

4. **பெண்பால் என்றால் என்ன?**

ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால் எனப்படும்.

எ.கா : மீனா, கண்ணகி, ராதா,.............

5. **பலர்பால் என்றால் என்ன?**

ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் மனிதர்களைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.

எ.கா : மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள்

6. **ஒன்றன்பால் என்றால் என்ன?**

அஃறிணையில் ஏதேனும் ஒன்றை மட்டும் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.

எ.கா : மயில், கரடி, இலை, கல், காகிதம்...........

7. **பலவின்பால் என்றால் என்ன?**

அஃறிணையில் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் எவை இருந்தாலும் அவை பலவின்பால் ஆகும்.

எ.கா : மயில்கள், கரடிகள், இலைகள், கற்கள், காகிதங்கள்...........